## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2025** **Date:20.11.2025**

**(PW1)-** ரோஸ்லி

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) 1ம் பிரதிவாதி தங்கப்பன் 1980ம் வருடம் 2000 ரூபாய் கடனாக எனது தந்தையிடம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். நான் எனது தந்தை உயிரோடு இருக்கும்போது அதற்குரிய அசல் பணத்தையும் வட்டியையும் திருப்பி கொடுக்கவில்லை என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.எனவே அந்த அடமானம் வில்லங்கத்தில் இருந்தது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். நான் 30.09.2024ல் வழக்கறிஞர் வழியாக ஒரு வழக்கறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரியல்ல அனுப்பவில்லை. ஆனால் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.8 ஆக மேற்படி வழக்கறிவிப்பை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அறிவிப்பு அனுப்பி இருந்தேன்.

2) 1ம் பிரதிவாதி தன்னுடைய மகன் 2ம் பிரதிவாதியின் பெயரில் வா.சா.ஆ.3 ஆன செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அதனால் இந்த வா.சா.ஆ.8 ஆன வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்ட 3 தினங்களுக்குள் வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டி கேட்டிருந்தேன் என்றால் நான் ரத்துசெய்யும்படி மேற்படி அறிவிப்பில் கூறவில்லை தற்போது வழக்கில் தான் தெரிவித்துள்ளேன். அதன்படி வழக்கறிவிப்பை பெற்ற 3 தினங்களுக்குள் நானும் எனது சகோதரரும் பெற்ற அவமானம் மற்றும் கஷ்டங்களுக்கு பிரதிவாதிகள் என்னிடனும் எனது சகோதரரிடமும் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கவேண்டுமென்றும் கோரியிருந்தேன் என்றால் சரிதான்.

3) அதேபோல் எனது அப்பாவிடம் இருந்து பெற்ற கடன் தொகையான ரூ.2000/- திரும்ப கேட்டிருந்தேன் என்றால் சரியல்ல நான் பத்திரத்தை மட்டும் தான் ரத்து செய்ய கேட்டேன். 1ம் பிரதிவாதி தங்கப்பன் அவருடைய மகன் 3ம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்த வா.சா.ஆ.3 ன்படி எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது என்று கோரினேன் என்றால் சரிதான். மேற்படி

அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் என்ன பதிலறிப்பு அனுப்பினார்கள் என்றால் பிரதிவாதிகள் எனது அப்பாவிடம் அவர்கள் பெற்ற ரூபாயை திருப்பி செலுத்திவிட்டதாகவும் எனது தந்தைதான் அதற்கு ரசீது போட்டுதரவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

4) நான் வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் மேற்படி வில்லங்க சான்றிதழ் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வில்லங்கசான்றிதழ் முதல் பக்கத்தில் தங்கப்பன் எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தின் பதிவு துலங்கும் என்றால் சரிதான். எனக்கு 1ம் பிரதிவாதி தங்கப்பன் எனது அப்பாவிடம் ரூ.2000/- திரும்ப செலுத்தி ரசீது பெற்றிருந்தால் எனக்கு இந்த வழக்கு தேவையில்லை என்றாலும் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தேவையில்லை என்றாலும் பணம் தந்து ரசீது பெற்றிருந்தால் தேவையில்லை. மேற்படி வில்லங்க சான்றிதழில் 4 வது பதிவாக எனது தந்தை பணம் பெற்றுக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு ரசீது எழுதிக்கொடுத்ததாக ஒரு பதிவு உள்ளது என்றால் அது போலியான வில்லங்க சான்றிதழ் ஆகும்.

5) வா.சா.ஆ.1 எனது தந்தை பெயரில் 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேறப்டி ஆவணத்தை ரத்து செய்யாத பட்சத்தில் அதன் அசல் என்னனிடம் தான் இருக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் அசலை தாக்கல் செய்யாமல் நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பணத்திற்கு ஈடாக அடமானம் வைத்துள்ள சொத்தின் ஆவணமும் என்னிடம் தான் இருக்கவேண்டும் என்றால் என்னிடம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என்ன குறிப்பிட்டுள்ளது என்று சரியாக தெரியவில்லை. மேற்படி ஆவணம் எனது அப்பா 1ம் பிரதிவாதியிடம் இருந்து பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டு ஏற்படுத்திக்கொடுத்த ரத்து ஆவணம் என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது.

6) நான் இந்த வழக்கை பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஏற்கனவே எனது தந்தையிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனை 1981ம் வருடம் 1ம் பிரதிவாதி திரும்ப செலுத்தி அடமானத்தை ரத்து செய்து ரத்தும் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை நான் தெரிந்துகொண்டே அதை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை வழக்கறிஞர் டி.ஆனிஸ்சோபியாரெக்சலின் என்பவர் தயாரித்துள்ளார் என்றாலும் அவர் நோபிள் உதயம் பத்திர அலுவலகத்தின் ஒரு பத்திர எழுத்தாள்ர் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திர அலுவலகத்தில் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி பணம் பெறுவதற்காக வேண்டி 15 ஆயிரம் செலவு செய்யக்கூடிய பத்திரத்திற்கு ரூ.70 ஆயிரம் வாங்கிக்கொண்டு இல்லாத ஒரு வில்லங்கத்தை இருப்பது போல் காண்பித்து சப் ரிஜிஸ்ட்ரார் உதவியுடன் இல்லாத ஒரு வில்லங்கத்தை இருப்பதாக வா.சா.ஆ.2 ஆவணத்தை ரத்து செய்தும், அதேபோல் வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தை 1ம் பிரதிவாதி தனத மகனுக்கு எழுதிக்கொடுத்ததுபோல் தயார் செய்து பதிவு செய்தும் ஏற்கனவே ஒரு வில்லங்கம் இருப்பது போல் பதிவு செய்து மீண்டும் ரத்து செய்யப்பட்ட ஆவணத்தை ரத்து செய்யாததுபோல் காண்பித்து வா.சா.ஆ.6 ன் மூலம் பணப்பற்று ரசீது ரத்து பத்திரம் என்று போலியாக உருவாக்கி அதை என்னிடம் தெரிவித்து நான் அதனடிப்படையில் 1ம் பிரதிவாதியிடம் லட்சக்கணக்கில் பணம் கேட்டேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நோபிள் பத்திர அலுவலகத்தில் நான் எவ்வளவு பணம் பெற்றிருந்தேன் என்றால் அலுவலகத்திற்கே நான் சென்றதில்லை. இல்லாத ஒரு வில்லங்கம் சொத்தின் மேல் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு பிரதிவாதிகளை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றாலும் வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சாியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்